[illegible] ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடல்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 02 சனிக்கிழமை (17-07-1993) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 231

# லலித் படுகொலையில் புலிகளுக்குத் தொடர்பு!

## ஸ்கொட்லண்ட்யார்ட் நிபுணர் குழு அறிக்கை

கொழும்பு, ஜூலை 17

லலித் படுகொலையில் புலிகளின் முத்திரை காணப்படுகிறது. புலிகள்தான் அவரைக் கொன்றார்கள் என்பதை எங்களால் நிரூபிக்க முடியாது. ஆனாலும் சந்தர்ப்ப சூழ்நிலை ஆதாரங்களை வைத்துப் பார்க்கும்போது கொலைக்கும் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரிகின்றது.

—இவ்வாறு ஸ்கொர்ட்லண்ட்யார்ட் துப்பறியும் நிபுணர் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

கடந்த ஏப்ரல் மாத இறுதியில் லலித் அத்துலத்முதலி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்திய ஸ்கொட் துப்பறியும் நிபுணர் குழுவின் தலைவர் அலன் எட்வேர்ட் தமது விசாரணை பற்றிய அறிக்கையை ஜனாதிபதி டி. பி.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா அரசு காரணமல்ல!

கொழும்பு, ஜூலை 17

லலித் கொலைக்கு பிரேமதாஸாவே காரணம் என்று லலித்தின் ஆதரவாளர்கள் குற்றஞ்சாட்டி வந்தனர். இக் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கின்றோம்.

—இவ்வாறு ஸ்கொட் துப்பறியும் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களோ அல்லது பொலீஸார் உட்பட வேறு அதிகாரிகளோ இந்தப் படுகொலையை திட்டமிட்டதற்கோ அல்லது அதில் சம்பந்தப்பட்டதற்கோ நேரடி அல்லது சந்தர்ப்ப சாட்சியம் ஏதும் கிடைக்கவில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-எ-3-162)

## ஸ்கொட் குழு காமினி கட்சிக்கு கண்டனம்

கொழும்பு, ஜூலை 17

லலித் கொலைக்கு பிரேமா அரசைக் குற்றம் சாட்டிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, விசாரணைக்குத் தேவையான ஆதாரங்களை மறைத்து வைத்திருந்தது.

—இவ்வாறு குறிப்பிட்டு ஸ்கொட் நிபுணர் குழு தனது அறிக்கையில் கண்டனம் தெரிவித்திருக்கிறது. (உ-162)

### விசுவமடு, பூநகரி-நல்லூர் மற்றும்

# கிளிநொச்சி நகரில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு!

### ஒருவர் பலி; 15 பேர் காயம்; 10 கடைகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஸ்ரீலங்கா விமானப்படையின பொம்மர்கள் நேற்று கிளிநொச்சி, விசுவமடு, பூநகரி-நல்லூர் ஆகிய இடங்களில் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

நேற்று நண்பகல் 12-45 மணியளவில் கிளிநொச்சி நகரை வட்டமிட்ட இரு பொம்மர்கள் பின்னர் கரடிப்போக்குச் சந்திப் பகுதியை நோக்கி குண்டுகளை வீசின.

குண்டுவீச்சில் பத்துக்கு மேற்பட்ட கடைகள் சேதமடைந்தன. 19 வயதுடைய செட்டி என அழைக்கப்படும் ஐந்தாம் வாய்க்கால் கிளிநொச்சியைச் சேர்ந்த பொன்னையா என்பவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

இத்தாக்குதலின் போது

(5 ஆம் பக்கம் பார்க்க)

# வில்பத்துவில் அதிரடித்தாக்கு! 5 பொலீஸார் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், ஜூலை 17

புத்தளம் மாவட்டத்தில் வில்பத்து வனவிலங்குச் சரணாலயத்திற்கு அருகில் உள்ள — இலவங்குன அச்சமுனை என்ற இடத்தில் ஒரு வீட்டிலும், காவலரண்களிலும் இருந்த 15க்கு மேற்பட்ட பொலீஸாரை சுற்றிவளைத்த விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

நேற்று முன்தினம் மாலை 4.20 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலின் போது ஐந்து பொலீஸார் உயிரிழந்தனர் என்றும்—

ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர் என்றும் ''புலிகளின் குரல்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸார் தங்கியிருந்த வீடும், காவலரண்களும் முற்றாகத் தகர்க்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஐந்து நிமிடங்கள் மட்டுமே நீடித்த இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இதே வேளை—

வில்பத்து பகுதிக்கு அருகிலுள்ள சிங்கள கிராமம் ஒன்றுக்கு பாதுகாப்பு அளிப்பதற்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

புத்தளம் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ரி 56 ரக துப்பாக்கிகள் — 11
- அதற்குரிய மகஸின்கள் — 41
- தொலைத் தொடர்புச் சாதனம் — 01
- அதற்குரிய தாங்கிகள் — 03
- நடுத்தர ரவைகள் — 945
- ஏ. கே. ஹோல்ஸர்கள் — 10
- இராணுவத் தொப்பிகள் — 08
- ஏ. கே. எல். எம். ஜி. லிங்குகள் — 03

(5 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாலை ஷெல் தாக்குதல்; யாழ். நகர மக்கள் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

மண்டைதீவுப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோதலை அடுத்து அதிகாலை 1.00 மணிமுதல் சுமார் 45 நிமிட நேரம் ஸ்ரீலங்கா படையினர் கண்மூடித்தனமாக ஷெல் தாக்குதல்களை நடத்தினர். இதனால் யாழ். நகரப் பகுதி மக்கள் பதற்றமடைந்தனர்.

நித்திரையில் ஆழ்ந்திருந்த மக்கள் விழித்தெழுந்து, செய்வதறியாது திகைத்து நின்றனர்.

நகரக் குடியிருப்புப் பகுதி [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

### அனுரா நீக்கத்தின் எதிரொலி

## சுதந்திரக்கட்சி செயலரின் வீட்டுக்குக் குண்டு வீச்சு!

அனுரா பண்டாரநாயக்கா கட்சியை விட்டு இடைநிறுத்தப்பட்டிருப்பதை அடுத்து சுதந்திரக்கட்சிக்குள் உட்கட்சிப் பூசல் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவின் வீட்டின்மீது இனந்தெரியாதோர் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தினர். இதனால் வீட்டின் முன்பகுதி சேதமடைந்தது. கார் ஒன்றும் பலத்த சேதமுற்றது.

இரவு வேளையில் தாம் வீட்டின் முன்புறத்திலிருந்து புத்தகம் வாசிப்பது வழக்கம் என்றும்—

ஆனால் நேற்று முன்தினம் தெய்வாதீனமாக — வேறு வேலையாக — தான் வெளியே சென்றிருந்ததால் குண்டு வீச்சிலிருந்து தப்பியதாகவும் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார். (உ-6)

## சிறிமாவின் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

அனுரா பண்டாரநாயக்காவுக்கு ஆதரவான குழு ஒன்று நேற்று கொழும்பு றொஸ்மிட் பிளேஸில் உள்ள சிறிமாவின் இல்லத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

நூற்றுக்கணக்கானோரைக் கொண்ட இக்குழுவினர் ஒலிபெருக்கி சகிதம் ஊர்வலமாக வந்து, சிறிமாவின் வீட்டுக்கு முன்னால் — சிறிமாவைத் தாக்கும் வகையில் — கோசமிட்டனர். கட்சித் தலைமைக்கு ஆதரவானவர்களை வசை பாடும் விதத்தில் அவர்கள் சத்தமிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தாய்க்குப் பதிலடி கொடுக்க அனுரா தயாராகுகிறார்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எனக்கு எதிராக யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார். ஆகையினால் நானும் பதிலடியாக—யுத்தத்தைப் பிரகடனப்படுத்த தீர்மானித்துள்ளேன்.

—இவ்வாறு தாய்க்கு எதிராக ''யுத்தப் பிரகடனம்'' செய்திருக்கிறார் அனுரா.

தன்னைக் கட்சியிலிருந்து இடை நிறுத்தியதுடன் சுதந்திரக் கட்சிக்குள் அமைதி என்பது முடிவடைந்து விட்டதாக அனுரா குறிப்பிட்டார்.

அனுராவின் கட்சி உறுப்புரிமையைத் தடை செய்வதன் மூலம் கட்சிக்குள் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்த சிறிமாவோ எண்ணினார். ஆனால் அதனால் உட்கட்சிப் பூசலே தீவிரமடைந்திருக்கிறது என்று செய்தி விமரிசகர் ஒருவர் குறிப்பிட்டார். (உ-6)

## தேசிய அரசு அமைக்கும் முயற்சி வலுவடையும்

கொழும்பு, ஜூலை 17

அனுரா பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பதை அடுத்து அக்கட்சி பிளவுபட்டிருக்கிறது.

அதனால் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பலமற்ற எதிர்க்கட்சியே இருக்கக் கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

இவ்வாறு செய்தி ஏஜென்ஸி ஒன்று தனது கண்ணோட்டத்தில் தெரிவித்திருக்கிறது.

சு. கவிலிருந்து வெளியேற்றப்பட்ட அனுரா, புதிய கட்சி ஒன்றை அமைத்து தேசிய அரசில் சேரக் கூடிய சூழ்நிலையும் உருவாகியிருக்கிறது.

ஐ. தே. காவுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, அனுரா அணி மற்றும் எதிரணியில் உள்ள சிறிய கட்சிகள் சேர்ந்து வலுவான தேசிய அரசு ஒன்றை அமைக்கலாம்.

அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டால், அடுத்த வருடம் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. இலகுவாக வெற்றியீட்டும்.—இவ்வாறு அக்கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-6-3)

## மண்டைதீவு மோதலில் இரு புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 17

நேற்று அதிகாலை மண்டைதீவு பண்ணை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா இராணுவ காவலரண் மீதான அதிரடித் தாக்குதலின் போது இரு வேங்கைகள் வீரச்சாவடைந்தனர்.

இராணுவத் தரப்புக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவரவில்லை.

லெப்டினன்ட் புனிதன் (கனகசபை செங்குட்டுவன்- காரைநகர் தற்போது ஐந்து சந்தி - யாழ்.), லெப்டினன்ட் கோபால் (கந்தையா கோபாலன் — சங்கத்தானை சாவ

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாதுகாப்புப் படையினரைத் தவிர

# ஏனையோர் ஆயுதம் வைத்திருக்கத் தடை

கொழும்பு, ஜூலை 17

பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலீஸாரைத்தவிர வேறெவரும் ஆயுதங்களை வைத்திருப்பது தடைசெய்யப் பட்டுள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்க வினால் விடுக்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைய—

வேறெவரும் ஆயுதங்களை வைத்திருப்பின் அவர்களுக்கு எதிராக ஆயுதக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும் என்றும்—

தனிப்பட்ட இராணுவக் குழுக்கள் கலைக்கப்படும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அமைச்சுக்களின் பாதுகாப்புப் பிரிவுகள் எனக் கூறப்படும் அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லும் சிலர் இருந்து வருவதாகவும்—

அவர்களது சட்டவிரோதச் செயற்பாடுகளும் உடனடியாக அமுல் செய்யப்படும் வகையில் இடைநிறுத்தப்படும் எனவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

அரசியல்வாதிகள் எவரும் பாதுகாப்புக் கோரினால், அவர்களுக்கு இனி பொலீஸ் பாதுகாப்பு மட்டுமே வழங்கப்படும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-6)


உ

உரும்பராய்

சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்

## கதிர்காமத் திருவிழா அலங்கார உற்சவம்

நிகழும் ஸ்ரீமுக ஹூ ஆடி மீ 04 ஆம் நாள் (19 — 07 — 1993) திங்கட்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு ஆரம்பமாகும். ஆடி மீ 18 ஆம் நாள் (02 — 08 — 1993) திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும்

கந்தபுராண தொடர் சொற்பொழிவு

தினமும் மாலை 5-00 மணி தொடக்கம் 6 00 மணி வரை நடைபெறும்.

நிகழ்த்துபவர்:- தமிழருவி திரு. த. சிவகுமாரன் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி. அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

உபயகாரரும்,
பரிபாலன சபையினரும்

(26541)



## வேலைவாய்ப்பு

### விற்பனைப் பிரதிநிதி

மேற்படி பதவிக்கான விண்ணப்பதாரரிடமிருந்து பின்வரும் தகைமைகளை எதிர்பார்க்கின்றோம்.


1. ஆகக்கூடியது 24 வயது.
2. கல்வித்தகைமை:-
   (அ) க.பொ த. (சா/த) இல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தி.
   (ஆ) க.பொ.த. (உ/த) இல் 3 பாடங்களில் சித்தி.
3. சுறுசுறுப்பாக செயற்படக்கூடியவராக இருக்க வேண்டும். வேதனம் ஊக்கத்துடன் தொடர்புடையதாக இருக்கும். இரு சிபாரிசு செய்யக் கூடியவர்களின் பெயர்களுடன் கூடிய சுயவிவரங்களுடன் 23-7-93 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக முகாமையாளர்,
ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட்டெட்,
14, சினியர் லேன்,
யாழ்ப்பாணம்.

[26546]


## அந்தியேட்டி அழைப்பு

மலர்வு: 05 — 11 — 1923



உதிர்வு: 18 — 06 — 1993

### அமரர் நாகலிங்கம் இராசையா

எங்கள் குடும்ப விளக்காக இருந்து எம்மை சீர் பெற வாழ வழிசமைத்த அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஆசிரியர் நாகலிங்கம் இராசையா (தியாகி திலீபனின் தந்தை அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 18—07—1993, ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்
இ. இளங்கோ, இ நம்பி, இ அசோகன்

திலீபன் வீதி,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(26548)

## இன்று

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படவுள்ள கூட்டுறவாளர் தின விழாவை ஒட்டிய கோட்டமட்ட அங்கத்தவர்களுக்கான கிராமிய நடனம், நாடக குழுப் பாடல் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8-30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறும்.

(க-162)

o o o

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களுக்கான கருத்தரங்கு ஒன்று, சங்க யாழ் கிளைத் தலைமையகத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

(க)

o o o

இலங்கை செஞ்சிலுவைச் சங்க, சாவகச்சேரி பிரிவினரால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பு மாணவர்களால் தைக்கப்பட்ட ஆடைகளின் பொருட்காட்சியும் விற்பனையும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

(க-117)

o o o

யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தென் தமிழீழ மாணவர்களுக்கான அவசர கூட்டம் ஒன்று இன்று சனி பிற்பகல் 4 00 மணிக்கு இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களைச் சேர்ந்த சகல மாணவர்களையும்—மற்றும் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியங்களின் செயற்குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(இ-5)

o o o

யாழ் மாநகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்களை இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் நாவலர் கலாசார மண்டபத்திற்கு சமூகமளிக்குமாறு யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

(ஒ-17)

o o o

மறைந்த முன்னாள் யாழ். ஆயர் எமிலியானுஸ் பிள்ளையின் நினைவாக, யாழ் பேராலயத்தில் இன்று மாலை 5 மணிக்கு ஆன்மா இரங்கல் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் இத் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்படும் நிகழ்ச்சி நடைபெறும்.

(அ-109)

### வில்பத்துவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக அமைக்கப்பட்டிருந்த பொலீஸ் காவலரண் மீது புலிகள் தாக்குதல் நடத்தி — அங்கிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்றனர் என்றும்—

இச்சம்பவத்தில் பொலீஸ்காரர் ஒருவரும், சிப்பாய் ஒருவரும், விவசாயி ஒருவரும் உயிரிழந்தனர் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தகவல் வெளியிட்டன.

(ஒ-3-6)


க. பொ. த. உயர்தரப் பரீட்சை 93இல் விலங்கியல் பாடத்தில் தோற்றும் மாணவர்களுக்கான

மாதிரி வினாத்தாள்

வெளிவந்து விட்டது

Science Centre - Jaffna
Science College - Jaffna

பெற்றுக் கொள்ளலாம்

இவ் வினாத்தாளுக்குரிய வகுப்பு இன்று சனிக்கிழமை 11 A. M. நடைபெறும்.

ஆசிரியர்
Mr. R. ஈஸ்வரதாசன்
B. Sc. (Cey) Dip In Ed.
Personal
New Science Centre
Elilkam Enterprise,
Jaffna.

(C/5452)


### ஜீ. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சை:

# அனுமதி அட்டைகள் விமானத்தில் தருவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜீ சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் விமான மூலம் நேற்று எடுத்து வரப்பட்டன.

அனுமதி அட்டைகள் அடங்கிய பொதிகளை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளிடம் இருந்து யாழ். கல்வி அலுவலக அதிகாரிகள் நேற்று பொறுப்பேற்றனர்.

தனியார் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் நேற்றே தபாலில் சேர்க்கப்பட்டதாகவும்—

பாடசாலை பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை கோட்ட அலுவலகங்களில் பாடசாலை அதிபர்கள் பெற வேண்டும் என்றும் — பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராசா தெரிவித்தார்.

பரீட்சைக்கான சகலவேலைகளும் பூர்த்தியாகியுள்ளன என்றும்—

பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவிருப்பதாகவும்—அவர் தெரிவித்தார்.

# வீரப்பன் தன் குழந்தையை நெரித்துக் கொன்றான்

### பி. ரி. ஐ. வெளியிட்ட தகவல்

மணிலா, ஜூலை 17

இந்தியப் பொலீஸாரால் மிகத் தீவிரமாகத் தேடப்பட்டுவரும் சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் பொலீஸாரிடம் பிடிபடாமல் தப்பியோடும் முயற்சியாக தனது பெண் குழந்தையை கழுத்து நெரித்து கொன்றிருப்பதாக பி. ரி. ஐ செய்தி ஒன்று தெரிவித்தது

தமிழகம் மற்றும் கர்நாடக மாநில எல்லைப் பகுதியில் உள்ள காட்டில் கடந்த வாரம் இச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது.

வீரப்பனால் கொல்லப்பட்ட பெண் குழந்தை பிறந்து 22 நாட்களான சிசு என பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

(ஒ-5)

# தென் தமிழீழப் பகுதியில் கைதான 200 பேர் எங்கே?

கொழும்பு, ஜூலை 17

தென் தமிழீழத்தில் படையினர் கைது செய்த தமிழர்களில் 200 பேரின் கதி என்ன? அவர்கள் எங்கே?

கைதானவர்கள் குறித்து எதுவித தகவலும் இல்லை என்றும், அவர்கள் காணாமற் போய்விட்டனர் என்றும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி] வெளியிட்டுள்ளது.

பிரஸ்தாப தமிழர்கள் கிழக்கின் எல்லைப் பகுதி கிராமங்களில் கைது செய்யப்பட்டிருந்தனர் என்றும் அப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-3)

# "குமண", "றுகுணு" புதனன்று வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 17

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமண' மற்றும் 'றுகுணு' கப்பல்கள் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

3 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் 'குமண' கப்பலிலும்—

2 ஆயிரத்து 500 பரல் மண்ணெண்ணெய் 'றுகுணு' கப்பலிலும்—

ஏற்றப்படுவதாகவும் அவை அடுத்த வார முற்பகுதியில் பருத்தித்துறையை நோக்கிப் புறப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது

எதிர்வரும் 21 ஆம் திகதி [புதன்கிழமை] அளவில் இவ்விரு கப்பல்களும் ஒரே நேரத்தில் பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்சமயம் பருத்தித்துறை (5 ஆம் பக்கம் பார்க்க)


## அறிவித்தல்

வேலணை பெருங்குளம்

முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

வருடாந்த மஹோற்சவம் — 1993

மஹோற்சவ தினங்கள்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | — 23 - 07 - 93 | வெள்ளிக்கிழமை |
| தேர் | — 01 - 08 - 93 | ஞாயிற்றுக்கிழமை |
| தீர்த்தம் | — 02 - 08 - 93 | திங்கட்கிழமை |

ஆலய விடயம் தொடர்பாக தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் பரிபாலனசபையுடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:

ஆலயம் தொடர்பாக கூட்டத்தை கூட்டுவதற்கோ மறுப்பு அறிக்கை விடுவதற்கோ முகாமையாளர் அல்லது வேறு எவருக்கும் பரிபாலன சபை அனுமதி அளிக்கவில்லை என்பதை அறியத் தருகின்றோம்.

செயலாளர் தலைவர்
ஆலய பரிபாலன சபை

(26547)


## கண்ணீர் அஞ்சலி

### கனகசபை செங்குட்டுவன்

[புனிதன்]

நேற்று அதிகாலை வேளையில் மண்டைதீவில் இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்த கனகசபை செங்குட்டுவன் (புனிதன்) என்ற வீரவேங்கைக்கு எங்கள் சங்கத்தின் சார்பாக கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

யாழ் வர்த்தகர் சங்கம்
21, நவீன சந்தை, மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(இ/5483)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்திலுள்ள

# எழுதுநர்கள் வெற்றிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ். மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள எழுதுநர் பதவிகள் விரைவில் நிரப்பப்பட இருக்கின்றன.

92 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடந்த பொது எழுதுநர் பரீட்சையில் பெறுபேறுகளின் அடிப்படையில் இப்பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்ட புள்ளிகளில் கூடுதல் புள்ளி பெற்றவர்களுக்கு நியமனத்தில் முதலிடம் அளிக்கப்படும்.

நியமனத்துக்கு முன்னோடியாக யாழ். மாவட்டத்தில் உள்ள அரச செயலகங்களில் உள்ள வெற்றிடங்களின் விவரங்களை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அந்த அந்த திணைக்களத் தலைவர்களிடம் கோரியுள்ளார். (த-3)

## தனிப்பட்ட பரீட்சார்த்திகள்

# 31ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சைக்கான விண்ணப்பங்களை தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இம்மாதம் 31ஆம் திகதிவரை அனுப்பி வைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பச் சட்டணங்களை எதிர்வரும் 31ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளும்படி கொழும்பிலுள்ள அஞ்சல் நாயகத்தினால் சகல தபாலகங்களுக்கும், உபதபாலகங்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபம் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டிருந்தும் ஜூன் மாதம் 9ஆம் திகதி அளவிலேயே இங்குள்ள தபாலகங்களுக்குக் கிடைத்திருந்தன. (இ-162)

## சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த (வலிகாமம், வடமாரட்சி, தென்மராட்சி) சட்டத்தரணிகள் மற்றும் சட்ட அறிஞர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து சட்டத்தரணிகளையும், சட்ட அறிஞர்களையும் அன்றைய தினம் தவறாது கலந்து கொள்ளும்படி தமிழீழ நிதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் திரு. இ. பரராசசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (த)

## நல்லூர் ஆலய சுற்றாடலில் 15 வீதி விளக்குகள்

அரியாலை, ஜூலை 17
நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு பொது மக்களின் வசதி கருதி நல்லூர் கந்தசுவாமி கோவிலின் சுற்றாடல் பகுதியில் 15வீதி விளக்குகள் அமைக்கப்படும்.

யாழ். மாநகரசபை மின்சார பொறியியலாளர் வே. நவரத்தினராஜா இத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த வீதி விளக்குகள் அதிகாலை 3மணி தொடக்கம் காலை 6மணி வரை எரியவிடப்படும் என்றும் அவர் சொன்னார். (த-17)

## வில்லூன்றித் தீர்த்தத்தில் ஆடி அமாவாசை விழா

யாழ்ப்பாணம், ஜூலை 17
இந்துக்களின் முக்கிய விரத தினமான ஆடி அமாவாசையன்று வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சங்கற்பித்து தீர்த்தமாடுவதற்கும் தர்ப்பணம் செய்து பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்கும் வேண்டிய ஒழுங்குகளை வில்லூன்றி புனித தீர்த்த பரிபாலன சபை மேற்கொண்டுள்ளது.

கடந்த நாற்பதாண்டுகள் தடைப்பட்டிருந்த ஆடி அமாவாசை தீர்த்தோற்சவமும் திங்கட்கிழமை மீண்டும் நடைபெறவுள்ளது. அதிகாலை 5-30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து வில்லூன்றி விநாயகர் புனித தீர்த்தத்திற்கு எழுந்தருளுவார். காலை 7 மணிக்கு தீர்த்தவாரி நடைபெறும்.

சென்ற இருபதாண்டுகளாக பொலிவிழந்திருந்த புனித தீர்த்தமும் சுற்றாடலும் கடற்கரைப் பிரதேசமும் யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரினால் கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட பரிபாலன சபையினால் பொறுப்பேற்கப்பட்டு இரண்டு லட்ச ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு சித்திரா பூரணை தினத்தன்று பொது மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டது தெரிந்ததே. (த-ஈ)

## மைலந்தனை படுகொலை வழக்கு:

# மட்டக்களப்புக்கு மாற்ற நீதிமன்ற அனுமதி தேவை

கொழும்பு, ஜூலை 17
"மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மைலந்தனை கிராமத்தில் 35 தமிழர் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கை மட்டக்களப்புக்கு மாற்ற வேண்டுமாயின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுச் செய்ய வேண்டும். மேன் முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கினால் மட்டுமே வழக்கை மட்டக்களப்புக்கு மாற்ற முடியும்".

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் தம்பிக்க அமரசிங்க மேற்கண்ட தகவலை அறிவித்துள்ளார்.

மைலந்தனை படுகொலை தொடர்பான படையினருக்கு எதிரான வழக்கு தற்சமயம் பொலநறுவை நீதிமன்றத்தில் நடைபெறுவதும்—

வழக்கின் சாட்சிகள் நீதிமன்றத்தில் சமுகமளிக்காததால் அவர்கள் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதும்— தெரிந்தவையே.

வழக்கின் சாட்சிகள் பாதுகாப்பின் நிமித்தம் பொலநறுவைக்கு வரமுடியாது என்றும்—

வழக்கை மட்டக்களப்புக்கு மாற்றுமாறும்— கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அதற்கு பதில் அளிக்கும் வகையிலேயே ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் மேற்கண்ட அறிவித்தலை விடுத்துள்ளார்.

நீதிச்சேவை சட்டத்தின் பிரிவு 47 இன் பிரகாரம் சட்டமா அதிபர் மேற்படி வழக்கை பொலநறுவை நீதிமன்றத்துக்கு மாற்றியிருக்கிறார் என்றும்—

இப்படி வழக்கை மாற்றியதன் மூலம் யாரும் பாதிக்கப்பட்டதாகக் கருதின் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மனுச் செய்து நீதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும்— ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அறிவித்துள்ளார்.

இவ் வழக்கின் சாட்சிகள் 34பேரும் தற்சமயம் வாழைச்சேனை அகதி முகாமில் உள்ளனர் (த-3)

## வங்கக் கடலில்

# இந்தியக் கடற்படையின் மிகப்பெரிய போர்ப் பயிற்சி

வங்கக் கடலில் மிகப் பெரிய போர்ப் பயிற்சிகளை இந்தியக் கடற்படையின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்படைப் பிரிவுகள் அடுத்த இரண்டு வாரங்களில் நடத்தவுள்ளன.

இதற்காக மேற்கு-கிழக்குக் கடற்படைப் பிரிவுகளின் போர்க் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் நேற்று சென்னை துறைமுகத்தை வந்தடைவதாக இருந்தன.

கிழக்குக் கடற்படைப் பிரிவுக்கு ரியர் அட்மிரல் பி. சி. ஜேக்கப்பும், மேற்குக் கடற்படைப் பிரிவுக்கு ரியர் அட்மிரல் மகேந்திரசிங்கும் தலைமை வகிப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

போர்க் கப்பல்களுடன் இந்திய விமானப் படையின் போர் விமானங்களும் குண்டு வீசும் விமானங்களும் கடலோரக் காவல் படையும் இப்பயிற்சிகளில் கலந்து கொள்ளும். (த-எ)


சாவகச்சேரி அருள்மிகு

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

அன்புடையீர்!

மேற்படி தேவஸ்தானத்தில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மஹோற்சவ விழாவை முன்னிட்டு 9ஆம் நாள் அதாவது நாளைய தினம் 18 - 07 - 73 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00மணிக்கு சித்திரத்தேரில் ஆரோகணிக்கும் துர்க்காதேவி பக்தர்களுக்கு காட்சி கொடுப்பாள்.

22-07-93 வியாழக்கிழமை ஆடிப்பூரத் திருநாளை முன்னிட்டு பால் சங்காபிஷேகமும், பிற்பகல் 3-00 மணிக்கு மாதரசிகள் பங்கு கொள்ள சுமங்கலிப் பூசையும் நடைபெறும்.

'அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக'

இங்ஙனம்,
பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா.

விளம்பர அன்பளிப்பு:
P. S. பரமநாதன்
''பத்மபதி''
(26516) மட்டுவில் தெற்கு.



**சின்னண்ணனின் 75 ஆவது பிறந்ததின நினைவு கூரல்**

வண. சேவக் I. T. இயேசுசகாயம்
18 — 07 — 1918 —— 18 — 07 — 1993

இடம்: தெ. இ. திருச்சபை மைதானம் நவாலி
காலம்: 18 — 07 — 1993 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 3.30 மணி
தலைமை: மகாகனம் D. J. அம்பலவாணர் (இளைப்பாறிய அத்தியட்சர்)
சொற்பொழிவு:
அருட்திரு. D. R. அம்பலவாணர் (சின்னண்ணனின் பாடல்களில் இறையியல்)
திருமதி கிருபா பவசிங்கம் (சின்னண்ணனின் பாடல்களில் பக்தி நெறியும் தமிழ்ப் பற்றும்)
சேவக் சாம் T. அல்பிறட் (சாம் அண்ணை) (சின்னண்ணனின் வாழ்க்கைச் சிறப்பு)
சின்னண்ணனின் பாடல்கள் பாடுவோர்:
1. திருமதி மேரிநாயகி மரியதாஸ்
2. நவாலித் திருச்சபைப் பாடகர் குழு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா அமைப்புக் குழுவினர்,
தெ. இ. திருச்சபை நவாலி.

சின்னண்ணனின் பாடல்கள் பிரதி ஒன்று ரூபா 10/-க்கு விற்கப்படும்.
(26501)



**A/L மாதிரி வினாத்தாள்**

A/L 93 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்காக
★ இரசாயனவியல்
★ பௌதிகவியல்
★ தாவரவியல்
★ தூயகணிதம்
★ விலங்கியல்
★ பிரயோககணிதம்
★ இந்துநாகரிகம்
★ இந்து சமயம்
★ சித்திரம்
★ பொருளியல்
★ வர்த்தகமும்நிதியும்
★ கணக்கியல்
★ அளவையியல்
★ தமிழ்
★ புவியியல்
★ கிறிஸ்தவம்
★ அரசியல்-மூலதத்துவங்கள்
★ சங்கீதம்

ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும்,

BOND
யாழ்ப்பாணம்.
(6358)



**அறிவித்தல்**

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)
1993 - 06 - 30ஆம் திகதி முடியவுள்ள வாக்காளர் இடாப்பு

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 30 06-1993ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல், யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி, தோணாந்தோட்ட வீதி ஆகிய இடங்களில் அமைந்துள்ள தற்காலிக நிவாரணக் கிளைகளில் அங்கத்தவர்களின் பார்வைக்காக (15-07-1993 — 25-07-1993ஆம் திகதி வரையான காலப் பகுதியில்) வைக்கப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியல் தொடர்பான ஆட்சேபனைகள் ஏதும் இருந்தால் அவற்றை 26-07-1993ஆம் திகதி தொடக்கம் 04-08-1993ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் செயலாளர், வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி,
செயலாளர்,
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
(சி-5428)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தரமான இரும்புப் பெட்டி (Iron Safe விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: North Ceylon Technical Institute, 14 St Peter's Lane, Hospital Road, Jaffna (6345)

புதிய ஆண்கள் ஏஸியா சைக்கிள் சகல உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 11,000/-. தொடர்பு: இல. 84, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம். (26591)

மோட்டார் சைக்கிள் - நான்கு பைப் - Crash Bar, Helmet சிறந்த பைநோக்குவர் நியாயமான விலை. சக்தி, இல. 387, கோவில் வீதி, நல்லூர். (26536)

புதிதாக செய்யப்பட்ட ஒற்றை மாட்டு வண்டி (A/30 ரயர் சில்லுகள் பொருத்தப்பட்டது) விற்பனைக்கு உண்டு தொடர்பு: தருமு தேங்காய்க்கடை, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி. (சந்தை முன்பாக) (26526)

சுத்தமான பெண் அல்சேஷன் 5½ மாதம் உரிய முறையில் ஊட்டச்சத்துக் கொடுக்கப்பட்டது, சுறுசுறுப்பானது, காரமானது, உரிய காலத்தில் பலன் தரவல்லது. தொடர்பு: Dr. Sellathurai, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (6355)

## இலவச திருமண சேவை

33 வயது, கேட்டை, ஜேர்மன் மணமகனுக்கும் 30 வயது, பூரட்டாதி செவ்வாய் 7, அவுஸ்திரேலிய மணப்பெண்ணுக்கும் மணமக்கள் தேவை. மணமகன் இலங்கையிலும் மணமகனை அவுஸ்திரேலியா அழைத்தும் திருமணம் செய்யலாம். து விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி (26475)

## திருமண சேவை

படித்த, உத்தியோகம் பார்க்கக்கூடிய மணப்பெண்கள் வெளிநாட்டு பட்டதாரி வரன்களுக்கு தேவை. சீதனரொக்கம் எதிர்பார்க்கப்படமாட்டாது. கொழும்பு வந்து விவாகம் செய்து அழைத்துச் செல்லலாம். உள்நாட்டு பட்டம் பெற்ற வரன்களும் இருக்கின்றார்கள். சீதனம் சுமுகமாக பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: திருமண ஒன்றியம், கோப்பாய். (5992)

## தவறிவிட்டது

பெறுமதிமிக்க தங்கச் சங்கிலி 2-7-93இல் யா / நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்திற்கும், யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அதிபர், அமிர்தாம்பிகை வித்தியாலயம், நுணாவில் கிழக்கு விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்: வே. கெ. தனபாலன். (26525)

பருத்தித்துறை வீதியில் புத்தூர் சந்திக்கும் ஆவரங்கால சந்திக்கும் இடையில் 14-7-93 அன்று எனது பெறுமதிமிக்க கைக்கடிகாரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆவரங்கால் சந்தியில் நிரு எரிபொருள் நிலையத்தில் ஒப்படைக்கவும். இராசன் யோகேஸ்வரி, இந்து இளைஞர் வீதி, ஆவரங்கால். [26530]

## ஆண்டு - 4 பரீட்சை

ஆண்டு-4 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சைகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன முதலாவது பரீட்சை இன்று 17-7-93 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் வேண்டியோர் பதிவு செய்யவும். எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26532)

## வெளிவந்துவிட்டது!

சகல A/L விஞ்ஞான பாடங்களுக்குமான கடந்த கால வினா - விடை புள்ளி விவரத்துடன் விற்பனைக்குண்டு. "A" Level Centre, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-5385)

## நாய்க்குட்டிகள்

அழகிய கறுப்பு, வெள்ளை, பிறவுண் நிறங்களுடைய பொமனேரியன் நாய்க்குட்டிகளும், கறுப்பு நிற அல்சேஷன் நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 48/1, 1ஆம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-5481)

## புலமைப் பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் நடத்தப்படும் புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை இன்று 17-7-93 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள்பெற விரும்புவோர் பெயர்களைப் பதிவு செய்யவும். எடிசன் அக்கடமி, யாழ் இந்துக் கல்லூரி அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26531)

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளிவிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மக்மிலன் புத்தகசாலை- யாழ்ப்பாணம் S. K. சாமி- நெல்லியடி, பளிங்கு- சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6352)

# அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை

முன் அனுபவம் உள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வேலைத் திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். சுய விவரங்களுடன் 19 — 07 — 1993 திங்கள் காலை 9 — 12 வரை நேரில் சமுகம் தரவும்.

நிர்வாக முகாமையாளர்,

**அருண் பிரிண்டேர்ஸ் அன்ட் பப்ளிசேர்ஸ்,**

இல. 15, 2 ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5393)

இல. 74/1, கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும்

**சிறி அமலா ஜுவலர்ஸ்**

ஸ்தாபனத்தாரின் ஆதரவுடன்

**புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும்**

# மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

காலம்: 18-07-1993 பிற்பகல் 2.00 மணி
இடம்: ஸ்ரீவிக்னேஸ்வரா விளையாட்டுக்கழக சவாரி மைதானம் - புத்தூர் கிழக்கு.

A B.C என மூன்று பிரிவுகளுக்கு சிறி அமலா ஜுவல்லர்ஸ் ஸ்தாபனத்தாரின் தங்கப்பதக்கங்களும் இன்னும் சிறந்த பரிசில்களும் வழங்கப்படும். எனவே இப்போட்டியில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் அனைவரும் தயாராகவும்.

விளம்பர அன்பளிப்பு:
சுப்பஸோ வீடியோ ஓடியோ சென்ரர்,
[மிக்ஸிங் (MIXING) செய்து தரப்படும்]
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/5480)

# பதவி வெற்றிடம்

பதவி:- வெளிக்கள உத்தியோகத்தர், தகவல் சேகரிப்பாளர்.

கல்வித்தகைமை:
க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். வர்த்தகம், கணக்கியல் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் விசேட தகைமைகளாகக் கருதப்படும்.

வயதெல்லை:-
36 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.


விண்ணப்ப முடிவு திகதி:- 22 - 07 - 93

அனுப்பவேண்டிய முகவரி:-
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டுக் கழகம்,
மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.


குறிப்பு:-
(1) யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து உதவி அரச அதிபர் பிரிவுகளிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
(2) விண்ணப்பதாரிகள் அனைவரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக யாழ். மாவட்டச் செயலக பொன்னம்மான் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு தவறாது சமுகமளித்தல் வேண்டும். எந்தப் பரீட்சார்த்திக்கும் தனிப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படமாட்டாது. (சி5474)

# நினைவஞ்சலிகள்

பதின்நான்காம் ஆண்டு | முதலாம் ஆண்டு



அமரர்
**வேலுப்பிள்ளை மருதமுத்து**
(பவுண் புறோக்கர்)
மலர்வு: 12 — 08 — 1912
உதிர்வு: 14 — 10 — 1979



அமரர்
**தனபாக்கியம் மருதமுத்து**
மலர்வு: 23 — 07 — 1926
உதிர்வு: 27 — 07 — 1992

திதி: 17 — 07 — 1993

அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

142, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (6349)

# 4ஆவது ஆண்டு நினைவஞ்சலி

நானிலத்தில்: 01 — 12 — 1942



மேனிலத்தில்: 17 — 07 — 1989

அமரர்
**ஆ. மகாலிங்க சிவம்**
(நில அளவையாளர்)

ஈண்டுள ஆலயம் இல்லம் தமிழினம் எங்கள் முன்னோர்
ஆண்டபொன் நாடெனும் அந்நினை வாலுயிர்-
அர்ப்பணித்தே!
ஆண்டுகள் நான்கின் றகன்றன என்பதால் அன்புநெறி
பூண்டவுன் செய்கை எம் புத்தியை விட்டுமே-
போய்விடுமோ!

மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள்.

விழிசிட்டி. (5996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சிறிமாவோவும் அனுராவும்!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி' தென்னிலங்கையின் பிரதான கட்சிகளில் ஒன்று. இப்போது ஆளுங்கட்சியாக விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சியைப் போல சிங்கள மக்களிடையே அதிகளவு ஆதரவு பெற்ற கட்சி. ஐக்கிய தேசியக் கட்சிக்குப் போட்டியாக வளர்ந்து இரண்டு தடவைகள் அரசாங்கம் அமைத்த சாதனையும் ஸ்ரீ. ல. சு கட்சிக்கு உண்டு.

தமிழர்களைப் பொறுத்த வரையில் இரண்டும் சிங்களப் பேரினவாதத்தில் ஊறித் திளைத்தவையே. தமிழர்களை அடக்கு முறைக்கு உட்படுத்துவதிலும், அவர்களின் உரிமைகளைப் பறித்தெடுப்பதிலும் இரண்டும் ஒன்றுடன் மற்றது போட்டி போட்டுச் செயற்பட்டவை; செயற்படுபவை. தமிழர் பிரச்சினை இந்தளவு மோசமடைவதற்கும் இது வரை தீர்க்கப்படாமல் இருப்பதற்குமான முழுப் பொறுப்பும் இரண்டு கட்சிகளையுமே சாரும்.

ஆட்சி பீடத்தில் ஏறுவதற்கு, தமது வாக்கு வங்கிகளைப் பெரிதாக்குவதற்கு இரண்டு கட்சிகளும் தமிழர் பிரச்சினையையே ஆயுதமாகப் பாவித்து வந்தன; வருகின்றன. அதனாலேயே அவை இரண்டும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினிடம் எந்தவித ஆலோசனையும் வழங்காமல், கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டின. அது நிற்க.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவிய உள் வீட்டுப்பிரச்சினையை; அம்மா-மகன்-மகள் சிறிமாவோ - அனுரா - சந்திரிகா தகராறை தக்கபடி பயன்படுத்த ஐ தே. கட்சித் தலைமைப்பீடம் திட்டமிட்டது.

கட்சித் தலைமைப் பீடத்துடன் அதிருப்தி அடைந்துள்ள அனுரா அணி எம். பிக்களை தனது பக்கம் இழுப்பதன் மூலம், சுதந்திரக் கட்சியை உடைக்கவும், அதே வேளை அரசமைப்பு மாற்றத்துக்கு அவர்களின் ஆதரவைப் பெறவும் ஐ தே. கவினர் திட்டமிட்டுக் கருமமாற்றினர்.

ஆனால் சிறிமாவோ முந்திக் கொண்டார். நீண்ட காலம் தனது சொற்கேளாது தனக்குப் போட்டியாக வந்து விட்ட மகன் அனுராவை தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்திக் கட்சியிலிருந்து தூக்கி எறிந்து விட்டார்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களாகப் புகைந்து கொண்டிருந்த தாய் சேய் சண்டை காலத்துக்குக் காலம் ஏதோ ஒரு விதத்தில் முறைக்கு ஒரு சாராரால் சமரசம் செய்து வைக்கப்பட்டது. ஆனால் இம் முறை தாய் மகனை அடித்துத் துரத்தி இருக்கிறார்.

முழுக்க முழுக்க ஒரு குடும்பச் சண்டைக்கு நடுவில் நின்று சிங்கள மக்கள் — வாக்காளர்கள் — திக்குமுக்காடுகிறார்கள். மக்கள் ஆதரவு இல்லையேல் கட்சியே இல்லை என்பதை அறியாமல் தாய்-மகன்-மகள் சண்டை வலுவடைந்துள்ளது!

கட்சி மாறுவதை தடை செய்யும் அரசமைப்புச் சட்ட விதியை திருத்தி அனுரா அணியினரில் இருந்து பல எம். பிக்களை தனது பக்கம் இழுக்க ஐ தே கட்சி திட்டமிட்டது. ஆனால் அனுரா சு. கவிலிருந்து வெளியேற்றப்பட்டதால் அது அசாத்தியமாகியுள்ளது.

வேண்டுமானால் அனுராவும் அவர்களது ஆதரவாளர்களும் புதிய கட்சி ஒன்றை உருவாக்கி அதனைப் பதிவு செய்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பலத்தைக் குறைக்கலாம்.

எப்படியோ ஐ. தே. க. பக்கமே லாபம் சேரப் போகிறது. சுதந்திரக் கட்சி உடைந்து அதன் பலம் குறையப்போகிறது!

## இளாலி படகு உரிமையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஜூலை 17

இளாலி—பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள் அனைவரையும் இன்று சனிக்கிழமை மு.ப 10 00 மணிக்கு இளாலிப் படகுத்துறைக்கு வருகை தருமாறு யாழ். மாவட்ட நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையிலான — 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 8.30 மணி முதல் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். இந்த ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதும்.

இன்றைய ஆட்டத்தின் பிரதம விருந்தினராக கனகரத்தினம் ம. ம வியின் அதிபர் திரு. எம். இராமலிங்கம் கலந்து கொள்வார். திருமதி இராமலிங்கம் வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களை வழங்குவார்.

போட்டிக்கான ஏற்பாடுகளை யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் திரு அமலசீலன் செய்துள்ளார். [உ]

o o o

ஊர்காவற்றுறை — வேலணை பிரதேச செயலர் பிரிவினால் நடத்தப்படும் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா இன்று காலை 8 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வேலணை ஊர்காவற்துறை பிரதேச செயலர் திரு. இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மாவட்ட பிரதி ஆணையாளர் திரு த. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ். திட்டப் பணிப்பாளர் திரு. எஸ் பத்மநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். இந்த விளையாட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை விளையாட்டு அதிகாரி திரு. கே. விமலராஜா செய்துள்ளார். [(உ-20]

o o o

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை காலை 9 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

o o o

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவிருக்கின்றன.

மூன்றாம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்காக பிற்பகல் 3 00 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் திருமலை நட்சத்திரங்கள் அணியை எதிர்த்து உரும்பராய் ஒஸ்கா அணி மோதும்.

மாலை 4 30 மணிக்கு நடைபெறும் இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா அணி மோதும்.

o o o

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் — கராத்தே போட்டிக்கான — விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது. விண்ணப்பப்பத்திரங்களை கராத்தே பயிற்றுனர்கள் கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் பெற்று விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

o o o

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் 7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — மட்டுப்படுத்தப்பட்ட பத்து ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டியின் கால் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் பரமேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. [உ 5]

## ஆலயங்களில்

பனை இத்தாவில் முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். (உ-117)

0 0 0

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். ஆகஸ்ட் முதலாம் திகதி இரதோற்சவமும், அடுத்த நாள் தீர்த்தமும் இடம்பெறும்.

0 0 0

சாவகச்சேரி கோவில் குடியிருப்பு ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலயம் சாவகச்சேரி துர்க்காதேவி ஆலயம் ஆகியவற்றின் ரதோற்சவம் நாளையும் தீர்த்தோற்சவம் நாளை மறுதினமும் நடைபெறும். (உ—117)

## கொக்குவில் வாசி கனடாவில் மரணம்

உடுவில், ஜூலை 17

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கனடாவில் ரொறொரன்டோ நகரில் ஆற்றில் குளிக்கச் சென்ற போது நீரில் மூழ்கி மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

குணரத்தினம் சர்வேஸ்வரன் (வயது 35) என்ற இந்த இளைஞர் தனது நண்பர்களுடன் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது சுழியில் அகப்பட்டு நீரில் மூழ்கி மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-152)

## கிளிநொச்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 11 பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி சென். திரேசா வித்தியாலயத்தை நோக்கியும் ஒரு குண்டு வீசப்பட்டது. அச்சமயம் அங்கு கல்விபயின்று கொண்டிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பெரும் பீதி அடைந்தனர். பாடசாலை கட்டடத்துக்கு அருகில் விழுந்த குண்டு வெடிக்காததால் மாணவர்களுக்கோ, கட்டடங்களுக்கோ பாதிப்பு ஏற்படவில்லை

விசுவமடுப் பகுதியிலும் நேற்றுக்காலை இதே விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. வயல் வெளியில் குண்டுகள் விழுந்தன. இதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

பூநகரியில் நல்லூர், சாமிக்குளம் என்னும் இடத்தில் இரண்டு பொம்மர்கள் குண்டுகளை வீசின.

இத்தாக்குதலின் போது ஒரு வீடு பலத்த சேதமடைந்தது.

சுப்பிரமணியம் லட்சுமி (45 வயது,) சுப்பிரமணியம் லோகேஸ்வரி (17 வயது) மற்றும் நல்லூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்விகற்கும் க. சிவதாசன் (15 வயது), த. குணேஸ்வரி (16 வயது) ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்தோர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கரடிப்போக்கில் குண்டு வீச்சின் போது காயமடைந்த நால்வர் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆறுமுகம் அருளானந்தம் (43 வயது) — உருத்திரபுரம், முத்தையா கிருஷ்ணன் (வயது 40) - இரணைமடு, அம்பலவாணர் சிதம்பரநாதன் [வயது 23] - கணேசபுரம், இராமன் இராமசாமி (வயது 50) - 3 ஆம் வாய்க்கால் ஆகியோரே அந்த நால்வரும் ஆவார், (ஒ 3-15)

## "குமண"...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி

யில் பொருள்கள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'குமாரி' கப்பல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பொருள்களை இறக்கி முடித்து கொழும்பு திரும்பும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'மெரினால்' கப்பல் அங்கு பொருள்களை இறக்கி முடித்த பின்னர் தீவுப்பகுதிக்கான பொருள்களுடன் நேற்று தீவுப்பகுதி நோக்கிப் புறப்பட்டது. (உ-3)

# கைதிகள் விடுதலை குறித்து பேச்சு எதுவும் இல்லை!

கொழும்பு, ஜூலை 17

புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் யுத்தக் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து பல்வேறு திரைமறைவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று இவ்வாறு தனது செய்திக் கட்டுரை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

ஆனால் இச்செய்தியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. பியட் தவஸ்ஸர் மறுத்துள்ளார்.

"யுத்தக்கைதிகள் குறித்து அரசாங்கம் எம்முடன் பேச்சுக்கள் எதையும் ஆரம்பிக்கவில்லை.

'கைதிகள் விடுதலைதொடர்பாக எம்முடன் பேச்சு நடத்திப் பயனில்லை, விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடனேயே அரசு பேச வேண்டும்'— என்றார் அவர். (உ-த-3)

## டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 17

இலங்கை — இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் இன்று கண்டி அஸ்கிரிய மைதானத்தில் ஆரம்பமாகுகின்றது. நேற்று பெய்த மழையினால் மைதானத்தில் நேற்றிரவு வெள்ளம் தேங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கடைகள் இன்று முழுநேரம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் இன்று முழு நேரமும் திறந்து இயங்கும் என வடபிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாஜம் அறிவித்துள்ளது.

ஆடி அமாவாசை தினமாகிய நாளை மறுதினம் திங்கட்கிழமை வர்த்தக விடுமுறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் இன்று கடைகள் முழுநேரம் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஆடிப்பிறப்பான நேற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. அதற்குப் பதிலாக கடைகள் நாளை திறக்கப்படும் என்பது சரியல்ல என்றும், வழமை போல ஞாயிறு வர்த்தக விடுமுறை நடைமுறையில் இருக்கும் என்றும் வடபிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாஜ வட்டாரங்கள் மேலும் கூறின. (அ-162-15)

## அரிசி இறக்குமதி கட்டுப்பாடு தளர்வு

கொழும்பு, ஜூலை 17

அரிசியை இனி எவரும் இறக்குமதி செய்ய அனுமதிப்பது என்று அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கேள்விப் பத்திரங்கள் கோரி அரிசி இறக்குமதியை மேற்கொள்ள இதுவரை கடைப்பிடித்து வந்த நடைமுறையை அரசு விலக்கிக் கொள்ளவுள்ளது. (இ-எ)

## மண்டைதீவு.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரி ஆகியோரே வீரச்சாவடைந்தவர்கள் ஆவர்.

லெப் கோபாவின் உருவப் படப் பேழை இன்று பிற்பகல் 3 30 மணிவரை அவரது இல்லத்திலும் பிற்பகல் 4 00 மணி முதல் 5,00 மணி வரை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்ட மேடையிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

லெப். புனிதனின் புகழுடல் ஐந்து சந்தி யாழ். நகரில் உள்ள அவரது வசிப்பிடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது (ஒ-3)

## அதிகாலை. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருவர் காயமடைந்தனர்; வீடுகள் சில சேதமடைந்தன.

யாழ் வெள்ளாந்தெரு சிவன் பண்ணை வீதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் நகைத்தொழிலாளியான இராசரட்ணம் கோபாலகிருஷ்ணன் (26 வயது), அவரது மனைவி ஜெயந்தினி (18 வயது) ஆகியோர் காயமடைந்தனர். அப்பகுதியில் 3 வீடுகள் சேதமடைந்தன.

பெருமாள் கோயில் மேற்கு வீதியிலுள்ள வளவு ஒன்றில் இருந்த தென்னையில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது அப்போது அங்குள்ள வீடு ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்த பொன்னுத்துரை ரவீந்திரன் (42 வயது) காலில் காயமடைந்தார். அருகில் படுத்திருந்த மனைவி மற்றும் பிள்ளைகள் தெய்வாதீனமாக காயமின்றி தப்பிக்கொண்டனர்.

சிவன்கோயிலுக்கு அருகிலும் ஒரு வீட்டின் கூரையில் 'பிளாஸ்டிக்' ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது.

மனோகரா[தியேட்டர் சந்திக்கு அண்மையில் காங்கேசன்துறை வீதியில் விழுந்து வெடித்த ஷெல்களினால் நான்கு வீடுகள் சேதமடைந்தன இப்பகுதியில் சில தென்னை மரங்களும் முறிந்து நாசமாகின, நீராவியடி கடைச்சாமி வீதிப்பகுதியில் விழுந்த ஷெல்லினாலும் சில வீடுகள் சேதமடைந்துள்ளன. (ஒ-15-162)

## லலித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஜேதுங்காவிடம் சமர்ப்பித்துள்ளார்.

ஸ்கொட் குழு தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

லலித் படுகொலை செய்யப்பட்ட முறை புலிகள் இயக்கம் அரசுக்கு எதிராகத் திட்டமிட்டுச் செயற்படும் முறையையே ஒத்திருக்கிறது.

அப்பையா பாலசிங்கம் அல்லது ரகுநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ள நபரே லலித்தைக் கொன்றிருக்கிறார். பலத்த காயமடைந்த அவர், தாம் கைது செய்யப்படலாம் என்ற பீதியில் சயனைட் விழுங்கியுள்ளார் என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி கூறமுடியும்.

விடுதலைப் புலிகளின் தலைமைத்தளம் அமைந்துள்ள வடபகுதியைச் சேர்ந்த பல சந்தேகநபர்களுக்கும் அத்துலத் முதலியின் கொலையாளிக்கும் தொடர்புகள் இருந்திருக்கின்றன.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் லெபனான் நாட்டில் இருந்து வந்தது. லெபனானுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இக் கொலைகளில் தங்களுக்கு எவ்வித பங்குமில்லை என்று புலிகள் அறிவித்திருந்தாலும், ஒரு நாட்டின் தலைவரையும், அவருக்குப் பின் அந்த இடத்துக்கு வரக்கூடியவராகத் திகழ்ந்த இன்னொருவரையும்புலிகள்கொலைசெய்தார்கள் என்றே ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. — இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ-3-162)

## புலிகள் கைப்பற்றிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| o தண்ணீர் தாங்கிகள் | — 02 |
| o தண்ணீர் தாங்கி அணிகலன்கள் | — 05 |
| o இராணுவப் பட்டிகள் | — 04 |
| o இராணுவ பைகள் | — 03 |
| o சப்பாத்து | — 15 சோடி |
| o சப்பாத்துப் பொலிஷ் | — 3 சோடி |
| o உணவுப் பெட்டிகள் | — 02 |
| o மழைக் கவசங்கள் | — 02 |
| o விசில்கள் | — 05 |
| o பொலிஸ் சீருடைகள் | — 06 சோடி |

(ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயும் மகளும் மரணம்

கடந்த செவ்வாய்க்கிழமை எரிகாயங்களுக்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தாயும் மகளும் மரணமானார்கள்.

கொடிகாமம் அல்லாரை வடக்கைச் சேர்ந்த கந்தசாமி சரஸ்வதி (வயது 35), இவரின் தாயார் சேதர் சின்னம்மா (வயது 60) ஆகியோரே மரணமானவர்களாவர்.

தீயில் எரிந்துகொண்டிருந்த மகளைக் காப்பாற்றுவதற்காக அவரைக் கட்டிப்பிடிக்க முயன்ற தாயும் எரிகாயங்களுக்குள்ளானார் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-117)

# மரண அறிவித்தல்கள்

## வீர வேங்கை
## கனகசபை செங்குட்டுவன்
## (லெப்ரினன்ட் புனிதன்)

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி வீதியில் வசித்தவருமாகிய வீர வேங்கை கனகசபை செங்குட்டுவன் வீரச் சாவைத் தழுவிக் கொண்டார். அன்னார் கந்தையா கனகசபை, கனகசபை விமலாதேவி ஆகியோரின் அன்பு மகனும், பாலசுப்பிரமணியம், கனகரூபா, சிவரூபன், வாசுகி, மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் நாளை (18-07-93) ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புதைகுழியில் விதைக்கப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. கனகலிங்கம்,
(சிறிய தகப்பன்)

(26539)

## தபீந்திரன் (ராசன்)
## (உசன்)

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சுப்பிரமணியம் பாக்கியத்தின் அன்பு மகனும் ரவீந்திரன் (ஓமான்), சுமந்திரன் (ஜேர்மனி) சிறிதரன் [கனடா], திருச்சோதி (ஜெயா). பிரகலாநிதி (அச்சி), பகீரதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாக்கியத்தின் மைத்துனனும், கார்த்திகா, சித்திரா, தர்சிகா, கவிதா, நிஷாந்தனின் அன்புச் சித்தப்பாவும், சிவராசா அருந்ததி, நடராசா சரஸ்வதி ஆகியோரின் பெறாமகனும், கண்மணியின் மருமகனும் ஆகிய திரு. தபீந்திரன் 15 - 07 - 93 அன்று யாழ். பிரதம வைத்தியசாலையில் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17-07 93) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் ராசன்மில், உசன்-மிருசுவில் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சுப்பிரமணியம்-பாக்கியம்.

(6854)

## வல்லிபுரம் கைலாசம்
(இளைப்பாறிய தபால் ஊழியர் - யாழ். தபாற்கந்தோர்)

புத்தூர் கிழக்கை பிறப்பிடமாகவும், 109 (277), கச்சேரி நல்லூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திரு. வல்லிபுரம் கைலாசம் அவர்கள் 16-07-1993 வெள்ளியன்று காலமானார். இவர் காலஞ்சென்ற செல்வமலரின் அன்புக் கணவரும், ஸ்ரீரங்கநாதனின் (Staff - வட்டுக்கோட்டை தொழில்நுட்ப நிறுவனம்) அன்புத் தந்தையும், ரதிராணியின் மாமனாரும், இராசம்மாவின் சகோதரரும், பரமு, திருமதி பராசக்தி பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும், உதிஸ்டிரன், கோகுலன் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17-07-93) சனிக்கிழமை காலை 10-30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
கை. ஸ்ரீரங்கநாதன்,
(மகன்)
109 (277), கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.

(26534)

## அந்தோனிப்பிள்ளை அருளானந்தம்
## (சில்லாலை)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அருளானந்தம் 16-07-93 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவர் எலிசபேத் (ரத்தினம்) அவர்களின் அன்புக் கணவரும், அன்ரன் (துறைமுகக் கூட்டுத்தாபனம், கொழும்பு), புஸ்பம் (ஜேர்மனி), பவளம், காலஞ்சென்ற மதுரம், அருமை (கொழும்பு, பயனியர் றேடர்ஸ்), பரிமளம் (நீர்கொழும்பு), றஞ்சி (கொழும்பு), பேபி (பண்டத்தரிப்பு பயனியர் றேடர்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், றதி (ஆசிரியை தி. கு. க. மகாவித்தியாலயம், வவுனியா) மற்றீஸ், அன்ரன் [சிலோன் பிறின்ரேர்ஸ், கொழும்பு] சந்திரா, கரோலினா ஆகியோரின் அன்பு மாமனாரும் சியாமின், ஜெனசி, நிர்மலன் சர்மிலன், டெறிக், றொட்றிக், பெலின்டா, விறஜிறிக், லொறின்டா, பெல்றிக்லின்டா, ஜெலின்டா, றஜன், றமேஸ், டினேஸ், சதீஸ், விஜி, றஜி, றஜான், றிஜானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17-07-93] சனிக்கிழமை பி. ப. 3 மணியளவில் கட்டுடை இல்லத்திலிருந்து சண்டிலிப்பாய் புனித திரேசம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் சில்லாலை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக கொண்டு செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
அ. யோ. செல்வநாயகம் [பேபி]
[மகன்]
திருமகால்
கட்டுடை,
மானிப்பாய்.

(26544)

# நாளை

சரசாலை வடக்கு வின்சன் ஆஷா பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சரசாலை வடக்கு ஸ்ரீ கணேசா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். [க-117]

o o o

வடமராட்சி மாவடி மாவீரர் படிப்பகத்தினரின் பாலர் பாடசாலைகளின் முதலாவது ஆண்டு மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (க-87)

o o o

கொக்குவில் இளைஞர் சங்கம், மனோன்மணி சனசமூக நிலையம், யாழ் சர்வோதயத்தின் ஆதரவுடன் நடத்தும் மனோன்மணி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1மணிக்கு சனசமூக நிலைய முன்றிலில், சனசமூக நிலையத் தலைவர் திரு. ஆ. இராசையா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

(க 69)

o o o

திருமறைக் கலாமன்றத்தின் சைவசித்தாந்தக் கருத்தரங்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

(க-51-111)

o o o

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சமாசத்தின் ஒத்திசைவோடு, வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நாளை காலை 9.30 மணிக்கு சாளரம் இதழ் கருத்து நிகழ்வு சமாசத் தலைவர் திரு. ச. கைலாசநாதனின் தலைமையில் நடைபெறும் [ஒ]

o o o

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் பத்தாவது வாராந்த சோதிட ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறும்.

''புத்திரபாவம் சில பிரச்சினைகள்'' என்ற தலைப்பில் இடம்பெறும் ஆய்வரங்கை எம். எஸ். சரவணபவன் நெறிப்படுத்துவார். [ஒ]

o o o

சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஸ்தாபகர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. செ. செல்வராசா தலைமையில் நடைபெறும். மருதனார்மட கோட்ட மேலதிக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. இரத்தினராசா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். [ஒ-152]

o o o

யாழ். கோட்ட இசை ஆசிரியர்களுக்கான சங்கீதபாட நெறி சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு நாளை காலை 8.30 மணியளவில் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இசை ஆசிரியர்களை இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர் திரு. திலகநாயகம்போல் கேட்டுள்ளார். [ஒ-162]

## பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். பல்கலைக்கழகத்தின் 1991 விஞ்ஞானப் பொதுப் பட்டப் பரீட்சையில் வி. சிவபாலன், வி. சிவானந்தன் ஆகியோர் சித்தி அடைந்துள்ளனர். [க]

# பருத்தித்துறைக் கடலில் 2 மீனவர்களை காணவில்லை

## கடற்படையினர் கைது செய்தனரா?

பருத்தித்துறை முனை கடலில் நேற்று முன்தினம் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில் இருவரைக் காணவில்லை. இவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

அன்றைய தினம் இரவு 7.30 மணியளவில்— 5 படகுகளில் சென்ற மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம்— அவர்களை நோக்கி திடீரென ''போக்கஸ்'' லைட் (வெளிச்சம்) பாய்ச்சப்பட்டது என்றும்—

அதை அடுத்து மீனவர்கள் படகுகளுடன் கரையை நோக்கி விரையத்தொடங்கிய போது, வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும்—ஏனையோர் கரைக்கு வந்து சேர்ந்த வேளை ஒரு படகையும் அதில் இருந்த சவரிமுத்து அருமைராசா (48 வயது), வேலாயுதம் சிவம் (24 வயது) ஆகிய இருவரையும் காணவில்லை என்றும்—தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இருவரையும் படையினர் கைது செய்து கொண்டு சென்றனரா என்பது தெரியவில்லை.

இது குறித்து செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழுவிடம் உறவினர்கள் முறையிட்டுள்ளனர். (ஒ-109)

# பரு. சக்கோட்டை கடலில் மீனவர்கள் மீது தாக்குதல்

பருத்தித்துறை சக்கோட்டைக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி நேற்றுக் காலை 8 30 மணியளவில் விசைப்படகில் வந்த படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

மீனவர்கள் கட்டுமரத்திற்குள் குப்புறப்படுத்து கரையை நோக்கி வேகமாக வந்துசேர்ந்தனர். தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

ஆனால் கட்டுமரம், இயந்திரம் என்பன குண்டுகள் பாய்ந்து சேதமான தாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-109)


# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக் கல்லூரி அருகாமையில்)
411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## O/L கணிதம்

புதிய பிரத்தியேக வகுப்புகள்
புதிய 3 பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
ஆசிரியர்:-
திரு. B. P. பாஸ்கரன்

பிரிவு 1—செவ் • வியா — பி.ப 5 00—6.15
பிரிவு 2 - சனி - ஞாயிறு —மதியம் 12.15—1.15
பிரிவு 3—சனி - ஞாயிறு — பி.ப 3.15—5.00

★ பாடத்திட்டம் பூர்த்தியாவதுடன் 16 வருட வினாத்தாள் மீட்கப்படும்

ஆரம்பம்: 18-07-1993 ஞாயிற்றுக்கிழமை

(5476)


# மரண அறிவித்தல்

## திருமதி
## ஞானம்மா பொன்னுத்துரை

சங்குவேலியை பிறப்பிடமாகக் கொண்ட ஞானம்மா பொன்னுத்துரை நேற்று கட்டுடையில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி பொன்னுத்துரையின் (மலேயன் பென்சனர், தலையாளி) அன்பு மனைவியும், மாசிலாமணி [Retd Asst Director, Customs, மலேசியா], மனோன்மணி, Dr. சிந்தாமணி [மலேசியா], ஆனந்தா [Retd. Education Officer, மலேசியா], Dr ராஜசிங்கம் [லண்டன்], திருமதி புஷ்பவதி (மலேசியா), கமலாவதி, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணி (Retd. Teacher, மலேசியா], R சதானந்தன் [Pensioner], ரட்னேஸ்வரி (Physiotheraphist, மலேசியா), ஞானமலர் [Retd Teacher, மலேசியா], S. நாகராசா [Retd Teacher, மலேசியா], A. R. பத்மநாதன் (Retd Postmaster), விஜயலக்சுமி, N. மகேசன் (Executive Officer, C.D.E) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுடையில் இருந்து இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
R. சதானந்தன் (சங்குவேலி)
A.R. பத்மநாதன் (கட்டுடை)
[மருமக்கள்]
அரசடி வீதி,
கட்டுடை,
மானிப்பாய். (26549)


# நியூ விமாகி

27\3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சகலவிதமான

★ சைக்கிள் உதிரிப்பாகங்கள் ★ பெயின்ற் வகைகள்
★ வாணிஸ் ★ கிறிஸ்

போன்ற அனைத்துப் பொருள்களும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனையாளர்களுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.

## விமாகி நிறுவனம்.

(சி-5890)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org